1983 பிப்ரவரி 10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே கோழிப்பண்ணையினை தனியார் ஆரம்பிக்க அவர்கள் சிறு விவசாயிகளாக இருந்தால், விவசாயத் தொழிலாளர்களாக இருந்தால் வங்கிகள் மூலமாக 100 கோழிகளுக்கான தொகை 5,865 ரூபாய் கடனாக மற்றும் மானியமாகக் கொடுத்தும், தற்போதைய பண்ணைகளுக்குக் கோழிகள் மாற்றுவதற்காக கடனுடன் விவசாயத் தொழிலாளர்களுக்கு 970 ரூபாய் அரசு மானியமாகவும், சிறு விவசாயிகளுக்கு 727 ரூபாய் மானியமாகவும் கொடுத்து அவர்களை இன்றைக்கு கோழி வளர்ப்புத் துறையில் முன்னேறுகின்ற வாய்ப்பை அரசு ஏற்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இது போன்ற கோழிப்பண்ணைகளை கூட்டுறவுத் துறையில் ஆரம்பித்து நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் நல்ல கருத்துக்கள் தான். ஆகவே அவர்களுடைய உணர்வுகளை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்குச் சொந்தமான கோழி உரிப்பகங்கள்

* வினா எண். 159—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) TAPCO விற்குச் சொந்தமாக கோழி (இறைச்சி) உரிக்குட (Dressing plant) எங்கெங்குள்ளன ?

(ஆ) அவைகள் நல்ல முறையில் இலாபகரமாக நடைபெறுகின்றனவா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்குச் சொந்தமாக, சென்னை அடையாறில் உள்ள மார்க்கெட்டிங் பிரிவில் மட்டும், ஒரு நவீன கோழி உரிப்பகம் உள்ளது.

(ஆ) இது அடையாறில் இயங்கும் விற்பனைப் பிரிவின் ஒரு அங்கமாகும். ஆதலால் இதற்கென்று தனியாக இலாப, நட்டக் கணக்கு கிடையாது.